சார்பு நீதிமன்றம், மேலூர்
OS No.171/2023

பெயர் : ஜெயக்குமார்
தகப்பனார் பெயர் :சங்கரபாண்டியன்
கணவர் பெயர் :
வயது :35
கிராமம் :மதுரை, அழகப்பாநகர்
வட்டம் :மதுரை
தொழில் :பொறியாளர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

25.03.2026

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் 2ம் வாதி. வாதி தரப்பு 1வது சாட்சி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். 25.02.2019 தேதியிட்ட இந்த வழக்கின் பிரதிவாதிக்கும், என் மனைவி சுவாதிகாவிற்கும் இடையே ஏற்பட்ட கிரைய ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.1 பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் ஒளிநகல் வா.சா.ஆ.2. வவுச்சர்கள் 16 எண்ணம் வா.சா.ஆ.3 வரிசை. சிவா டிரேடர்ஸ் மதுரையில் கொடுத்த பில்கள் 2 எண்ணம் வா.சா.ஆ.4 வரிசை. செந்தூர் பில்டிங் மெட்டீரியல் சப்ளையர்ஸ் கொடுத்துள்ள பில்கள் 6 எண்ணம் வா.சா.ஆ.5 வரிசை. கோபி பிரகேஷ் எலெட்டிரிக்கல் நிறுவனத்தார் கொடுத்துள்ள பில் மற்றும் அதற்கான வவுச்சர் 2எண்ணம் வா.சா.ஆ.6 வரிசை. வெள்ளையப்பா ஸ்டீல்ஸ் நிறுவனம் கொடுத்துள்ள பில்கள் 3 எண்ணம் வா.சா.ஆ.7 வரிசை. காவல் ஆய்வாளர் ஒத்தக்கடை அவர்களுக்கு பிரதிவாதி கொடுத்துள்ள புகார் மனு வா.சா.ஆ.8. வழக்கு சொத்து வீட்டின் புகைப்படம் வா.சா.ஆ.9 வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.10 பிரதிவாதி பெற்று கொண்டதை காட்டக்கூடிய அஞ்சல ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.11.நான் காவல்துறை கண்காணிப்பாளர், மதுரை

அவர்களுக்கு கொடுத்துள்ள புகார் வா.சா.ஆ.12. மேற்படி அறிவிப்பு பெற்றுகொண்டதை காட்டக்கூடிய Postal Tracking வா.சா.ஆ.13. என் மனைவியின் ஆதார் அட்டை ஒளிநகல் வா.சா.ஆ.14 எனது ஆதார் அட்டை ஒளிநகல் வா.சா.ஆ.15. நீதிமன்ற ஆணையர்அறிக்கை புகைப்படங்கள் மற்றும் பொறியாளர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.03.25 19:16:29 +0530

Sub Judge
Melur